Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, செப்டம்பர் 21, 2024 | இதழ் 161

# விக்கிரவாண்டியில் அரசியல் திருவிழாவாகக் கொண்டாட்டம் அக்டோபர் 27-ந்தேதி தமிழக வெற்றிக் கழக மாநாடு

# விஜய்

சென்னை, 21 செப் 2024: அடுத்த மாதம் (அக்டோபர்) 27ந் தேதி மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு நடைபெறும் என்று நடிகர் விஜய் இன்று அறிவித்துள்ளார்.

இந்த மாநாடு, நம்மை வழிநடத்தப் போகும் கொள்கைகளையும் நாம் அடையப் போகும் இலக்குகளையும் முழங்கும் அரசியல் திருவிழாவாகவும் பெருவிழாவாகவும் கொண்டாடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநாடு குறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், நடிகருமான விஜய் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி அறிமுகப்படுத்திய நாள் முதல், நம் கழகத் தோழர்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தமிழ்நாட்டு மக்களின் பேரன்புடனும் பேராதரவுடனும் நமது அரசியல் வெற்றிக்கான களம் விரிவடைந்து கொண்டே வருகிறது.

கழகக் கொடியேற்று விழாவின்போது, நமது முதல் மாநில மாநாட்டுத் தேதியை அறிவிப்பதாகக் கூறியிருந்தோம். நமது மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசியல் களத்தில் புதிய நம்பிக்கையை விதைக்கக்கூடிய நமது கழகத்தின் கொள்கைத் தலைவர்கள், கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல் திட்டங்களைப் பிரகடனப்படுத்தும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு, வருகின்ற அக்டோபர் மாதம் 27ம் தேதி மாலை 4 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை




கிராமத்தில் நடைபெற உள்ளது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது வெற்றிக் கொள்கை மாநாடு, நம்மை வழிநடத்தப் போகும் கொள்கைகளையும் நாம் அடையப் போகும் இலக்குகளையும் முழங்கும் அரசியல் திருவிழாவாகவும் பெருவிழாவாகவும் கொண்டாடப்படவுள்ளது.

தமிழக மக்களின் மனங்களைத் தீர்க்கமாக வெல்லும் நோக்கில் அமையவுள்ள மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் ஏற்கெனவே நடந்துவரும் நிலையில், அதற்கான களப்பணிகளும் தொடங்கப்பட உள்ளன என்பதையும் உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன். இந்த மாநாட்டில் இருந்து வலிமையான அரசியல் பெரும்பாதையை அமைப்போம்.

இந்நிலையில், நமது முதல் மாநில மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடத்துவதற்காக, தமிழ்நாட்டு மண்ணைச் சேர்ந்த மகனாக, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் ஆதரவையும் ஆசிகளையும் உரிமையுடன் வேண்டுகிறேன். விரைவில் சந்திப்போம். வாகை சூடுவோம்".

இவ்வாறு நடிகர் விஜய் கூறியுள்ளார்.

விஜய் கடந்த பிப்ரவரி மாதம் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடங்கினார். இதையடுத்து கடந்த ஆகஸ்டு 22ந்தேதி கட்சியின் கொடியை அவர் அறிமுகப்படுத்தினார். முதல் மாநாட்டில் கட்சியின் கொள்கை, கொடியின் விளக்கம், கட்சியின் நிலைப்பாடுகள் குறித்து விளக்குவதாக அவர் அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து சேலம், திருச்சி உள்ளிட்ட சில இடங்களில் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மாநாடு நடத்துவதற்கான இடத்தைப் பார்வையிட்டனர். விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வி.சாலையில் மாநாடு நடத்த இடம் தேர்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இம்மாதம் 23-ந்தேதி மாநாடு நடத்துவதற்கு பாதுகாப்பு அளித்திட அனுமதி கேட்டு விழுப்புரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் மற்றும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. இந்நிலையில் 33 நிபந்தனைகளுடன் மாநாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கிடையில் முதல் மாநாட்டை மிக பிரமாண்டமாக நடத்த பல்வேறு கெடுபிடி போடப்பட்டதால், அதற்கான பணிகள் தொடங்காமல் இருந்தது. இதற்கிடையில் 23ந் தேதி தமிழக வெற்றிக் கழக மாநாடு நடைபெற காவல்துறையிடன் அனுமதி பெற்றும், மாநாடு தேதி மாற்றப்பட்டது குறித்தும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியானது.

இந்த மாநாட்டில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்றும், ஒரு லட்சம் பேர் வரை கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முந்தைய ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியில் விலங்கு கொழுப்பு சேர்க்கப்பட்டுள்ளது - சந்திரபாபு நாயுடு

# சந்திரபாபு நாயுடுக்கு எதிராக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தரப்பில் ஆந்திர ஐகோர்ட்டில் வழக்கு

# திருப்பதி லட்டு விவகாரத்தில் தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை: மத்திய அமைச்சர் உறுதி

சென்னை, 21 செப் 2024: திருப்பதி லட்டு விவகாரத்தில் விரிவான விசாரணை மேற்கொண்டு தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய உணவுத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற திருப்பதி வெங்கடாசலபதி கோவிலுக்கு தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றனர். இங்கு பிரசாதமாக லட்டு வினியோகம் செய்யப்படுகிறது. அனைவரும் தவறாமல் இதனை வாங்கிச் செல்வார்கள். நாளொன்றுக்கு 3 லட்சம் லட்டுகள் இங்கு பக்தர்களுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் பக்தர்கள் புனிதமானதாக கருதும் திருப்பதி லட்டு பிரசாதத்தில், முந்தைய ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியில் விலங்கு கொழுப்பு சேர்க்கப்பட்டுள்ளது என்று ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு, அதிர வைக்கும் குற்றச்சாட்டை கிளப்பினார். முந்தைய ஆட்சியில் இப்படி அநியாயம் செய்தனர்; நாங்கள் அதை தரமானதாக மாற்றி நெய் மட்டுமே லட்டு தயாரிப்புக்கு பயன்படுத்த வேண்டும்' என உத்தரவிட்டோம் என்றும் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

இதனிடையே சந்திரபாபு நாயுடுவின் மகனும், ஆந்திர பிரதேச ஐ.டி. அமைச்சருமான நாரா லோகேஷ் கூறுகையில், 'திருமலை கோவில் மிகவும் புனிதமானது. ஜெகன் மோகன் ரெட்டி நிர்வாகம் நெய்க்குப் பதிலாக விலங்குகளின் கொழுப்பைப் பயன்படுத்தியது அவமானம். அவர்களின் அரசால் கோடிக்கணக்கான பக்தர்களின் மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்க முடியவில்லை என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்' என்றார்.

இந்நிலையில் சந்திரபாபு நாயுடு புகார் கிளப்பிய மறுநாளே திருப்பதி லட்டு தொடர்பான ஆய்வக அறிக்கையும் வெளியானது. குஜராத்தில் உள்ள தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் சிஏஎல்எப் ஆய்வகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மீன்




எண்ணெய், விலங்கு கொழுப்பு ஆகியவற்றின் தடயங்கள் திருப்பதி லட்டில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதற்கு ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியினர் மறுப்பு தெரிவித்தனர். மேலும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் குற்றச்சாட்டுக்கு எதிராக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தரப்பில் ஆந்திர ஐகோர்ட்டில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. ஆந்திர முதல்வர் வைத்த குற்றச்சாட்டுக்கு குறித்து பதவியில் இருக்கும் நீதிபதி அல்லது உயர்நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட குழு விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறியுள்ளது. இந்த வழக்கு வரும் 25 ந்தேதி விசாரணைக்கு வர உள்ளது.

இந்நிலையில் டெல்லியில் இதுகுறித்து செய்தியாளர்களுடன் பேசிய மத்திய உணவுத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, திருப்பதியில் பிரசாதமாக வழங்கப்படும் லட்டில் விலங்குகளின் கொழுப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இது மிகவும் முக்கியமான விவகாரம் என முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார். இதுகுறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும். தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

இதனிடையே காங்கிரசின் மாநில தலைவரும் ஜெகன் ரெட்டியின் சகோதரியுமான ஷர்மிளா கூறியதாவது: இந்த விவகாரம் தொடர்பாக முழுமையான தகவல்கள் வெளியாக சிபிஐ விசாரணை நடத்த வேண்டும்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

## ‘ஸ்கொயர் போர்ட் ஷிப்யார்டு பிரைவேட் லிமிடெட்’ நிறுவனத்தை இணைப்பதற்கு கொள்கை ரீதியிலான ஒப்புதலை வழங்கியிருக்கும் ஹஸூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு

சென்னை, 21 செப் 2024: பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இ பி சி) ஒப்பந்த சேவைகள் துறையில் முதன்மை வகிக்கும் ஹஸூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் உடன் ஸ்கொயர் ஃபோர்ட் ஷிப்யார்டு பிரைவேட் லிமிடெட் - ஐ இணைப்பதற்கு கொள்கை ரீதியிலான ஒப்புதலை தனது இயக்குனர்கள் குழு வழங்கியிருப்பதாக அறிவித்திருக்கிறது. இரு நிறுவனங்களின் வழங்கலையும், கூட்டிணைவு சக்தியையும் ஒருங்கிணைப்பதன் மூலம் தொடர்புடைய அனைத்து அக்கறைப் பங்காளர்களின் சிறப்பான நலனை உறுதி செய்வதே இந்த இணைப்பு நடவடிக்கையின் நோக்கமாகும். இரு நிறுவனங்களின் பங்குதாரரர்கள், கடன் வழங்கியோர், பங்குச்சந்தை, என் சி எல் டி, செபி மற்றும் பிற சட்டப்பூர்வ அதிகாரி அமைப்புகளின் ஒப்புதலுக்கு இந்த இணைப்பு நடவடிக்கை உட்பட்டதாகும். கர்நாடகா மாநிலத்தின் பீஜப்பூர் ஹுப்ளி பிரிவில் என் எச் 218-ன் 4.40 கி.மீ-லிருந்து 56.00 கி.மீ வரை 2 லேன்களாக சாலையை விரிவாக்கம் செய்வதற்காக முளவாடு எஃப் பி என்ற இடத்தில் சாலையைப் பயன்படுத்தும் வாகனங்களுக்கான பயனாளி கட்டணத்தை வசூலிக்கும் முகமையாக செயல்பட இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திடமிருந்து ஒரு பணி ஆணையை தனக்கு வழங்கப்பட்டிருப்பதை சமீபத்தில் ஹஸூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் அறிவித்திருந்தது. வழங்கப்பட்டிருக்கும் இச்செயல்திட்டத்தின் மதிப்பு ரூ. 2.59 கோடியாகும்.

பஹாடி கோரேகான்-1473, ஷிர்தோன்- மிமிமி, கோனி- 1374, நவ்டே-1449, சி பி டபிள்யூ டி-1447, தலோஜா-1415/16, தானே- 1453 மற்றும் கனம்வர்நகர்-1180 ஆகிய இடங்களில் பல்வேறு அமைவிடங்களை அகழ்ந்து தோன்றுவதற்காக பி.ஜி. ஷிர்கே கன்ஸ்ட்ரக்□ஷன் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட்-யிடமிருந்து ஒரு பணியாணை கிடைத்திருப்பதையும் இந்நிறுவனம் இதற்கு முன்னதாக தெரிவித்திருந்தது. வழங்கப்பட்டுள்ள இச்செயல்திட்ட பணி ஆணையின் மதிப்பு ரூ. 30 கோடியாகும். இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு செயற்பிரிவின் முன்னணியில் ஹஸூர் மல்டி புராஜெக்ட்ஸ் லிமிடெட் உள்ளது. உயர்தர மற்றும் நம்பகமான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இ பி சி) ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்கான ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி வளர்ச்சி காண செய்திருப்பதன் மூலம் இதை அது சாதித்திருக்கிறது. தேசத்தின் கட்டமைப்பு செயல்பாட்டில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இத்தொழில்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் நிறுவனமாக மிக விரைவாக எச் எம் பி எல் உருவெடுத்துள்ளது.

## அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் உடல்நல பராமரிப்பில் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்த “தி பிங்க் புக்“ ஐ வெளியிடுகிறது

சென்னை, 21 செப் 2024: மருத்துவ பராமரிப்பு மற்றும் நோயாளிகளின் பாதுகாப்புக்கான புதிய தரநிலைகளை அமைப்பதில் ஒரு முன்னோடியாக இருக்கும் அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ், உடல்நல பராமரிப்பு அமைப்புகள் முழுவதிலும் பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான கட்டமைப்பான "தி பிங்க் புக்" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முன்முயற்சியானது, 41 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் பணியின் அடிஸ்தானமாக இருக்கும் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உயர்த்துவதற்கான அப்பல்லோவின் தற்போதைய உறுதிப்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.



அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் நிறுவனத்தின் இந்த பிங்க் புக் மருத்துவமனை சூழல்கள் முழுவதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு முழுமையான வழிகாட்டியாக செயல்படுகிறது. இது உடல்நல பராமரிப்பு பாதுகாப்பில் பாதுகாப்பு கலாச்சாரத்தின் முக்கியமான முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பணியாளர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட நெறிமுறைகளை அமைக்கிறது.

தொடக்க விழாவில் பேசிய அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி சங்கீதா ரெட்டி, சுகாதாரத் துறையில் ஒரு வலுவான பாதுகாப்பு கட்டமைப்பின் தேவையை எடுத்துரைத்துக் கூறும்பொழுது, "அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் இல், நோயாளிகளின் பாதுகாப்பிற்கான எங்கள் அர்ப்பணிப்பு நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மாறாமல் இருந்து வருகிறது. 'தி பிங்க் புக்' மூலம், அப்பல்லோவினுல் பாதுகாப்பு நெறிமுறைகளை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், முழு உடல்நலப் பராமரிப்பு சுற்றுச்சூழல் அமைப்புக்கும் ஒரு திட்டத்தை வழங்குவதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். உடல்நலப் பராமரிப்பில் பல கண்டுபிடிப்புகளை வழிநடத்தியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், ஆனால் எங்கள் நோயாளிகள் மற்றும் உடல்நல பராமரிப்பு நிபுணர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை விட முக்கியமானது எதுவுமில்லை. இந்தப் புத்தகம், எங்களது அனுபவத்தில் நாங்கள் சேகரித்த அறிவுச் செல்வங்களை உள்ளடக்கி, உடல்நலப் பராமரிப்பு துறையில் உள்ள அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாதுகாப்பு வழிகாட்டுதலை விட அதிகமாக சமபங்கு மற்றும் உடல்நலப் பராமரிப்பு பணியிடத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் அர்ப்பணிப்பாக இருக்கிறது. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான புதிய தரநிலைகளை நாங்கள் தொடர்ந்து அமைத்து வருவதால், இந்த முயற்சி நோயாளிகள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்."என்றார்.

உடல்நலப் பராமரிப்பு பாதுகாப்பில் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை இந்த புத்தகம் மேலும் வலியுறுத்துகிறது, குறிப்பாக பெண்களுக்கு, கடுமையான அரசாங்க விதிமுறைகளை கோடிட்டுக் காட்டுகிறது மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை உட்பட பாதுகாப்புக் கொள்கைகளை மருத்துவமனைகள் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. தலைமைத்துவ அர்ப்பணிப்பு, பயிற்சி மற்றும் திறந்த தொடர்பு மூலம் ஒரு நேர்மறையான பாதுகாப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதன் அவசியத்தை இது முக்கியப்படுத்திக்காட்டுகிறது. அபாயகரமான நோயாளிகளைக் கண்டறிந்து நிர்வகித்தல், பீதி பொத்தான்கள் மற்றும் கண்காணிப்பு மூலம் பாதுகாப்பை மேம்படுத்துதல், நன்கு ஒளிரும் பணிச்சூழலியல் பணியிடங்களை உறுதி செய்தல் மற்றும் இரவு-பணி பணியாளர்களுக்கு ஆதரவை வழங்குதல் ஆகியவை முக்கிய பரிந்துரைகளில் அடங்கும். கூடுதலாக, இது தற்காப்பு பயிற்சி, மனநல ஆதரவு, சட்ட விதிகளுக்கு இணங்குதல் மற்றும் போஷ் சட்டத்திற்கு இணங்க பாதுகாப்புக் கவலைகளைப் புகாரளிப்பதற்கான தளங்களை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக வாதிடுகிறது.

அப்பல்லோவில், அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் குறிப்பாக மூத்த தலைமைத்துவத்தில், உடல்நலப் பராமரிப்பில் பாதுகாப்பு கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை ஒரு முக்கிய மதிப்பாக வலுப்படுத்துகின்ற பெண்களின் சமமான பங்கேற்பு உள்ளது. உடல்நலப் பராமரிப்பு துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் நிறுவனம், நோயாளிகள் மற்றும் உடல்நலப் பராமரிப்பு வழங்குநர்களுக்கு ஒன்றுபோல பாதுகாப்பான, மிகவும் பயனுள்ள சூழல்களை உருவாக்குவதில் தொழில்துறையை வழிநடத்த அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த கட்டமைப்பானது உடல்நலப் பராமரிப்பு வழங்குநர்களுக்கு, நோயாளிகள் மற்றும் உடல்நலப் பராமரிப்பு பணியாளர்களுக்கு ஒன்றுபோல பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வின் உயர்ந்த நிலைகள் உறுதி செய்வதற்கான நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அவர்களுக்கு வழங்குகின்ற ஒரு வழிகாட்டும் கருவியாக வடிவமைக்கப்பட்டுள்ளது,

## தேசத்தின் டிரக் திருவிழா நிகழ்வில் பெரிய அளவிலான பிசினஸ் இலாபமீட்டலை சாத்தியமாக்க வாடிக்கையாளர்களுக்கு திறனதிகாரம் வழங்கும் பணியில் டாடா மோட்டார்ஸ்

சென்னை, 21 செப் 2024: இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக வாகன தயாரிப்பாளரான டாடா மோட்டார்ஸ், 2024 செப்டம்பர் 19 அன்று சென்னை தேசத்தின் டிரக் திருவிழா (தேசத்தின் டிரக் திருவிழா) என்ற பெயரில் ஒரு முழுநாள் நிகழ்வை நடத்தவிருக்கிறது. டாடா மோட்டார்ஸ் -ன் டிரக்குகளது சமீபத்திய அணிவரிசை மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய சிறப்பான உள்நோக்குகள் மற்றும் நேரடி அனுபவத்தின் மூலம் சென்னை டிரக்கிங் சமூகத்திற்கு திறனதிகாரம் வழங்குவதே இந்நிகழ்வை நடத்துவதன் குறிக்கோளாகும்; டிரக் உரிமையாளர்களுக்கு இலாபமீட்டும் திறனை அதிகரிப்பதும் மற்றும் குறைவான மொத்த உரிமைத்துவ செலவுகளை (டிசிஓ) வழங்குவதே இந்நிகழ்வின் நோக்கமாகும். இந்நிகழ்வின்போது, டிரக்குகளது செயல்திறனை அதிகரிப்பது, எரிபொருள் சிக்கனத்தை மேம்படுத்துவது மற்றும் அதிக இலாபத்தை அடைவது மீது நிபுணர்களின் வழிகாட்டலை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள். வாகனங்களின் செய்முறை விளக்க நடவடிக்கைகளும் மற்றும் டாடா மோட்டார்ஸ் வழங்கும் விற்பனைக்குப் பிந்தைய விரிவான ஆதரவு குறித்த தகவல்களும் பங்கேற்பாளர்களுக்கு



பயனளிக்கும் விற்பனைக்குப் பிந்தைய ஆதரவில் வாகனது பராமரிப்பு செயல்திட்டங்கள், டிரக்குகளின் மேலாண்மைத் தீர்வுகள், வருடாந்திர பராமரிப்பு சேவை திட்டங்கள் மற்றும் சம்பூர்ணா சேவா 2.0 முன்னெடுப்பின் வழியாக 24 / 7 சாலையோர சர்வீஸ் உதவி ஆகியவை உள்ளடங்கும். அவர்களது டிரக்குகளின் மூலம் நீண்டகால வெற்றியை முன்னெடுத்துச் செல்வதற்கான விரிவான தகவலை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கென இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக, இந்நிகழ்வின் ஒட்டுமொத்த அனுபவத்தை இன்னும் அதிக சுவாரஸ்யமானதாக ஆக்குவதற்காக நீண்டகால கூட்டாண்மை மற்றும் ஆதரவை வழங்கி வரும் முக்கிய வாடிக்கையாளர்களையும் டாடா மோட்டார்ஸ் பாராட்டி கௌரவிக்கும். டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகனங்கள் துறையின் டிரக்குகளுக்கான துணைத்தலைவர் மற்றும் பிசினஸ் ஹெட் ராஜேஷ் கவுல் பேசுகையில், “வாடிக்கையாளர்களது தேவைகளை புரிந்துகொள்ளவும் மற்றும் அவைகளுக்கு நல்ல தீர்வுகளை வழங்கவும் டாடா மோட்டார்ஸ் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. அவர்களோடு நேரடியாக தொடர்பு கொள்வதற்கும் மற்றும் எமது சமீபத்திய டிஜிட்டல் தீர்வுகளை முன்னிலைப்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான செயல்தளத்தை தேசத்தின் டிரக் திருவிழா எங்களுக்கு வழங்குகிறது. எமது சிறப்பான டிரக்குகளின் தயாரிப்பு அணிவரிசை மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட சேவைகளை காட்சிப்படுத்துவதற்கு இது எங்களை அனுமதிப்பதுடன், வாடிக்கையாளர்களது நீண்டகால இலாபமீட்டல் நிலை மற்றும் வெற்றி மீது அவைகளின் நிஜ உலக தாக்கத்தையும் இந்நிகழ்வு எடுத்துக்காட்டும். எமது நவீன தீர்வுகள், வாடிக்கையாளர்களது பிசினஸ் செயல்பாடுகளை எதிர்காலத்திற்கு தயாரானதாக ஆக்குவதற்கெனவே வடிவமைக்கப்பட்டவை; மாறிவரும் பிசினஸ் செயல்தளத்தில் அவர்கள் எப்போதும் முன்னணி வகிப்பதை இவை உறுதி செய்யும். எமது ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் மற்றும் பகிரப்படும் வெற்றியை அடையவும் எமது வாடிக்கையாளர்களோடும், பார்ட்னர்களோடும் கலந்துரையாடி செயல்படும் இத்தருணத்தை நாங்கள் ஆவலோடு எதிர்நோக்குகிறோம்,” என்று கூறினார். எல் பி டி, அல்ட்ரா, சிக்னா மற்றும் பிரைமா உட்பட, கேபின் விருப்பத்தேர்வுகளுடன் டிரக்குகளின் விரிவான அணிவரிசையை டாடா மோட்டார்ஸ் வழங்குகிறது. சந்தை சுமைகள், விவசாயம், சிமெண்ட், இரும்பு மற்றும் ஸ்டீல், கண்டெய்னர், பெட்ரோலியம், கெமிக்கல், வாட்டர் டேங்கர்கள், எல்பிஜி, எஃப்எம்சிஜி, கட்டுமானப்பணி, சுரங்கப்பணி மற்றும் நகராட்சி துப்புரவு செயல்பாடுகள் உட்பட, சரக்கு போக்குவரத்தின் மாறுபட்ட தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் விதத்தில் முழுமையாக கட்டமைக்கப்பட்ட பாடி விருப்பத் தேர்வுகளுடன் இந்த டிரக்குகள் கிடைக்கப்பெறுகின்றன. திறன்மிக்க ஃபிளீட் மேலாண்மைக்கான டாடா மோட்டார்ஸ் ஸ்ரீ ன் இணைக்கப்பட்ட வாகன செயல்தளமான ஃப்ளீட் எட்ஜ் இத்தயாரிப்பு தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நீண்டகாலம் உழைப்பதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டு, வாடிக்கையாளர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இவ்வாகனங்கள், டாடா மோட்டார்ஸ் -ன் விரிவான வலையமைப்பின் ஆதரவைப் பெற்றவை. நாடெங்கிலும், 2500 டிரக் சர்வீஸ் முனைகளையும், தமிழ்நாட்டில் மட்டும் 220 அமைவிடங்களையும் கொண்டிருக்கும் இந்நிறுவனம், முழுமையான ஆதரவை உறுதி செய்வதன் வழியாக வாகனங்கள் அதிக நேரம் களத்தில் இயங்குவதற்கு வழிவகுக்கிறது.

## இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை 100 ஆண்டுக்கு முன்பே மாற்றி வடிவமைத்த சர் ஜான் மார்ஷலுக்கு நன்றி - முதல்வர் ஸ்டாலின்

சென்னை, 21 செப் 2024: 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை மாற்றி வடிவமைத்த சர் ஜான் மார்ஷலுக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:



''மிகச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு, 1924 செப்டம்பர் 20 அன்று, சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பை அறிவித்து, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை என்றென்றைக்குமாக மாற்றி வடிவமைத்தார். ஜான் மார்ஷலது பங்களிப்பை நன்றிப்பெருக்குடன் பின்னோக்கி அவருக்கு இந்நாளில் நன்றி கூறுகிறேன்.

சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில் சரியான தீர்மானத்துடன் அதனை அவர் திராவிட இனத்துடன் தொடர்புபடுத்தினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கண்டுபிடிப்பின் நூற்றாண்டினை ஒரு பன்னாட்டுக் கருத்தரங்குடனும், சர் ஜான் மார்ஷலின் முழுவுருவச் சிலையினைத் தமிழ்நாட்டில் நிறுவியும் கொண்டாடப்படும் என எனது அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது''. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## மொபில் இந்தியாவின் முதல் இரவு வீதிப் பந்தயத்தை சென்னையில் 'இந்திய பந்தய விழா 2024' உடன் நடத்துகிறது



திருச்சி, 21 செப் 2024: ஆட்டோமொபைல் லூப்ரிகண்டுகளில் முன்னணியில் உள்ள மொபில், ரேசிங் புரமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஆர்பிபிஎல்) உடன் இணைந்து, ஆகஸ்ட் மாதம் சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டில் நடந்த 'இந்தியன் ரேசிங் ஃபெஸ்டிவல் 2024' இன் போது சென்னையில் நடந்த இந்தியாவின் முதல் இரவு வீதிப் பந்தயத்திற்காக. 31 மற்றும் செப்டம்பர் 1. இந்த மைல்கல் நிகழ்வு, வேகம், திறமை, தொழில்நுட்பம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அற்புதமான கலவையை வெளிப்படுத்தி, இந்திய பந்தய விழாவுடன் மொபிலின் மூன்றாவது ஆண்டாக இணைந்தது. இந்தியன் ரேசிங் லீக் மற்றும் ஃபார்முலா 4 சாம்பியன்ஷிப் ஆகிய இரண்டிற்கும் உத்தியோகபூர்வ மசகு எண்ணெய் பங்குதாரராக, மொபில் இந்திய மோட்டார்ஸ்போர்ட்டை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டியது, அதன் கவனம் 'மொபில் 1' இல் கவனம் செலுத்துகிறது. ஆர்பிபிஎல்- ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட திருவிழா, நவம்பர் 2024 வரை நாடு முழுவதும் ஐந்து பரபரப்பான சுற்றுகளைக் கொண்டுள்ளது. இந்த நிகழ்வு இந்தியாவில் மொபில் 1 இன் 50 ஆண்டுகால இருப்பைக் கொண்டாடியது.

இவ்விழாவில் கருத்து தெரிவித்த திரு. விபின் ராணா, சிஇஓ- எக்ஸ் ஆன் மொபில் லூபிரிகண்ட் பி. லிமிடெட் கூறியது, "இந்தியா ரேசிங் வாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம், இது உலகளாவிய மோட்டார்ஸ்போர்ட்டை மேம்படுத்துவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், இந்தியாவில் பந்தயத்தின் எதிர்காலத்தை துரிதப்படுத்துகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், மொபில் தயாரிப்புகள் வழங்கிய நம்பிக்கையின் மூலம் பந்தய வீரர்கள் மற்றும் ஆர்வலர்களை மேம்படுத்தி, அவர்களின் திறனைத் திறக்க உதவுகிறோம். ஆர்பிபிஎல்- இன் தலைவரான அகிலேஷ் ரெட்டி மேலும் கூறுகையில், மொபில் உடனான இந்த தொடர்பைப் பற்றி நாங்கள் நம்பமுடியாத அளவிற்கு பெருமிதம் கொள்கிறோம் மேலும் இந்தியாவின் முதல் இரவு தெருப் பந்தயத்தை உயிர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இரவு பந்தயத்தின் உற்சாகமும் ஆற்றலும் திருவிழாவிற்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளன, இது எங்கள் பந்தய வீரர்களின் திறமை மற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. எப்4 மற்றும் ஐஆர்எல்- இன் அனைத்து அணிகளின் குறிப்பிடத்தக்க செயல்திறனுக்காக வாழ்த்துகள், மேலும் எதிர்காலத்திலும் இதே வேகத்தை தொடர நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

பாலிவுட் நட்சத்திரங்கள் ஜான் ஆபிரகாம் மற்றும் அர்ஜுன் கபூர், கிரிக்கெட் ஜாம்பவான் சவுரவ் கங்குலி மற்றும் நடிகர் நாக சைதன்யா போன்ற பிரபல அணி உரிமையாளர்கள் இந்த விழா குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தது.

வெற்றி பெற்ற அணிகள் மற்றும் தனிநபர்களின் சிறப்பான செயல்பாடுகளைக் கொண்டாடி, இந்தியாவில் மோட்டார்ஸ்போர்ட்டின் எதிர்காலத்தை இயக்குவதில் மொபில் 1ன் பங்கை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், மாபெரும் விருது வழங்கும் விழாவுடன் இந்நிகழ்வு முடிவடைந்தது.

## சாம்சங் இந்தியாவில் 4கே அப்ஸ்கேலிங், ஏர்ஸ்லிம் டிசைன் மற்றும் நாக்ஸ் செக்யூரிட்டியுடன் 2024 கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவியை அறிமுகப்படுத்துகிறது




கோயம்புத்தூர், 21 செப் 2024: இந்தியாவின் மிகப் பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், இன்று கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவியை ரூ. 41990 என்ற தொடக்க விலையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பிரீமியம் தொலைக்காட்சித் தொடர் பார்வையாளர்களின் அனுபவத்தை பல நிலைகளில் உயர்த்தி, புதிய சகாப்தத்தைக் காண அனுமதிக்கிறது. வீட்டு பொழுதுபோக்கு.

2024 கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவி ஆனது 4கே அப்ஸ்கேலிங், ஏர்ஸ்லிம் டிசைன், டைனமிக் கிரிஸ்டல் கலர், மல்டி வாய்ஸ் அசிஸ்டண்ட், கியூ-சிப்போனி மற்றும் கிரிஸ்டல் பிராசசர் 4கே உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் வருகிறது. புதிய 2024 கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவியானது, கிரிஸ்டல் பிராசஸர் 4கே மற்றும் 4கே டிஸ்பிளே புத்திசாலித்தனத்திற்கு அருகில் இருக்கும் வகையில் படத்தின் தரத்தை உயர்த்தும் மாஸ்டர்ஃபுல் 4கே அப்ஸ்கேலிங் அம்சத்தால் இயக்கப்படுகிறது. அதன் டைனமிக் கிரிஸ்டல் கலர் தொழில்நுட்பமானது, வண்ணங்களின் வாழ்நாள் மாறுபாடுகளை வழங்குகிறது, இதனால் நுகர்வோர் ஒவ்வொரு நிழலின் நுட்பமான விவரங்களையும் பார்க்க முடியும். எச்டிஆர் அம்சம் பார்க்கப்படும் உள்ளடக்கத்தின் ஒளி நிலைகளின் வரம்பை அதிகரிக்கிறது, அதே சமயம் கான்ட்ராஸ்ட் என்ஹான்சர் அம்சம் அது மிகவும் இயற்கையாகத் தோன்றுவதையும் அடுக்கு மாறுபாட்டுடன் நம்பமுடியாத அளவிற்கு விரிவாக இருப்பதையும் உறுதி செய்கிறது. டிவியின் பில்ட்-இன் மல்டி வாய்ஸ் அசிஸ்டென்ட், பிக்ஸ்பி அல்லது அமேசான் அலெக்சாவைப் பயன்படுத்தி இணைக்கப்பட்ட வீட்டு அனுபவத்தை அனுபவிக்க வாடிக்கையாளர்களை அனுமதிக்கிறது.

"இன்றைய இளம் நுகர்வோர், விளையாட்டு, ஓடிடி அல்லது வீட்டு பொழுதுபோக்கின் பிற வடிவங்களாக இருந்தாலும் மிக உயர்ந்த ஆடியோ காட்சி அனுபவத்தை விரும்புகிறார்கள். புதிய கிரிஸ்டல் 4கே தொலைக்காட்சித் தொடர், தற்கால குடும்பங்களுக்கு ஒரு சிறந்த டிவி பார்க்கும் அனுபவத்தை வழங்குவதன் மூலம், ஸ்மார்ட் மற்றும் இணைக்கப்பட்ட வாழ்க்கையின் முன்மொழிவை மேலும் மேம்படுத்துவதன் மூலம் ஒரு அளவுகோலை அமைக்கிறது. கிரிஸ்டல் 4கே டிவி தொடர், அதன் 4கே உயர்நிலைத் திறனுடன், 4கே டிஸ்ப்ளேகளின் பிரமிக்க வைக்கும் தெளிவுத்திறனுடன் பொருந்தக்கூடிய தரநிலைத் தெளிவுத்திறனில் உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது, கியூ-சிம்பொனி மற்றும் ஓடிஎஸ் லைட் உடன் மிகச்சிறந்த ஒலி திறன்களை வழங்கும் அதே வேளையில் உயிரோட்டமான படத் தரத்தை வழங்குகிறது. மேலும், டிவி நாக்ஸ் பாதுகாப்புடன் வருகிறது, இது பயனர்களின் தகவல்களை முழுமையாகப் பாதுகாக்க உதவுகிறது," என்று சாம்சங் இந்தியாவின் விஷுவல் டிஸ்ப்ளே பிசினஸின் மூத்த இயக்குநர் விப்லேஷ் டாங் அவர்கள் கூறினார்.

ஏர்ஸ்லிம் டிசைன் மூலம் மனதைக் கவரும் நேர்த்தியான சுயவிவரத்துடன், 2024 கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவி என்பது ஒரு சுற்றுப்புற பொழுதுபோக்கு போர்டல் ஆகும், இது இந்தியாவில் 300+ சேனல்களுடன் இலவச முடிவற்ற உள்ளடக்கம் கொண்ட சாம்சங் டிவி பிளஸ் சேவையுடன் வருகிறது.

ஓடிஎஸ் லைட் மூலம் மேம்படுத்தப்பட்ட, இந்தத் தொலைக்காட்சித் தொடர் நுகர்வோர் திரையில் இயக்கத்தை உண்மையானது போல் உணர உதவுகிறது. உயர்த்தப்பட்ட அடாப்டிவ் சவுண்ட் தொழில்நுட்பமானது அனைத்து உள்ளடக்கத்தையும் காட்சிக்கு காட்சியாக நிகழ்நேரத்தில் பகுப்பாய்வு செய்கிறது, இது மிகவும் ஆற்றல்மிக்கதாக ஆக்குகிறது மற்றும் உத்தேசிக்கப்பட்ட விளைவுகளைப் பெருக்குகிறது. கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவி, க்யூ-சிம்பொனியையும் கொண்டுள்ளது , இது டிவி ஸ்பீக்கர்களை முடக்காமல் சிறந்த சரவுண்ட் எஃபெக்ட்களுக்காக ஒரே நேரத்தில் டிவி மற்றும் சவுண்ட்பார் ஸ்பீக்கர்களை தனித்துவமாக இயக்க அனுமதிக்கிறது.

உண்மையிலேயே இணையற்ற உள்ளடக்கம் பார்க்கும் அனுபவத்தை வழங்கும், கிரிஸ்டல் 4கே டைனமிக் டிவியானது பல புதுமையான ஆடியோ தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.

## வெர்டிகோ சக்கர் என்றால் என்ன என்பதை இந்த பேலன்ஸ் விழிப்புணர்வு வாரத்தில் புரிந்து கொள்ளுங்கள்

சென்னை, 21 செப் 2024: ஒருநாள் காலை எழுந்தவுடன் உங்களை சுற்றியுள்ள உலகம் சுற்றுகிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒரு சிலருக்கு இந்த உணர்வு வெறும் கணநேர உணர்வுக்கு அப்பாற்பட்ட விஷயம் ஷ இது அவர்களது அன்றாட வாழ்வின் ஒரு பகுதி. உடலின் சமநிலை உணர்வை பாதிக்கும் இந்த வெர்டிகோ யாரையும் தாக்கலாம். ஆனாலும் இந்த நோயை பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது.

உலகளாவிய விதத்தில் இந்த வெர்டிகோ 10 நபர்களில் ஒருவரை பாதிக்கிறது. இந்தியாவில் மட்டுமே 70 மில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பாட் நிறுவனமும் ஐகியூவிஐஏ-ம் இணைந்து நடத்திய ஒரு சமீபத்திய ஆய்வின் படி இந்தியர்கள் பலர் ஒரு வருடத்திற்கும் அதிகமாக வெர்டிகோவுடன் வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. அதாவது பிரதிமாதம் அவர்கள் இந்த நிலையினால் ஒரிரு முறை தாக்கப்படுகின்றனர். இதன் ஃபிரீக்வென்சி ஒருபுறமிருந்தாலும் பலர் தங்கள் அறிகுறிகளை அலட்சியப்படுத்துகின்றனர் அல்லது மருத்துவ சிகிச்சைக்கு மிகுந்த தேவையேற்படும் வரை அதை தாமதப்படுத்துகின்றனர்.

அப்பாட் இந்தியாவின் மருத்துவ இயக்குனர் டாக்டர் ஜெஜோ கரன்குமார் கூறுகையில், "வெர்டிகோவை பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பது மக்கள் தங்களுக்கு தேவைப்படும் அறிவு மற்றும் கருவிகள் மூலம் அவர்கள் சரியான ஆதரவை பெற உதவுவதில் முக்கிய பங்காற்றுகிறது. அப்பாட் மற்றும் ஐகியூவிஐ -ன் கருத்துக்கணிப்பின் படி வெர்டிகோ நோயாளிகள் தலைசுற்றல் உணர்வை தவிர அவர்கள் தலைவலி (54%), தலை கனத்தல் (41%) மற்றும் கழுத்து வலி (28%) போன்ற பொதுவான அறிகுறிகளையும் உணருகிறார்கள். இது அவர்களது சொந்த வாழ்க்கையில் சிக்கல்களை உருவாக்குகிறது மற்றும் இதனால் அவர்கள் முக்கியமான தருணங்களை ரத்து செய்வது அல்லது தவறவிடுவது மற்றும் தங்கள் குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவதை குறைத்துக்கொள்வது போன்ற சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். முன்கூட்டிய நோய் கண்டறிதல் மற்றும் சரியான சிகிச்சை ஆதரவு ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதன் மூலம் வெர்டிகோவின் தாக்கத்தை குறைத்து நோயாளிகள் சமன்செய்யப்பட்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ அவர்களுக்கு உதவ முடியும்," என்று விளக்கினார்.

வெர்டிகோ மயக்கத்தை பற்றி மேலும் புரிந்துக்கொள்வது

டிசினெஸ் என்பது தலை-இலேசாகுதல், தள்ளாட்டம், நிலையற்றதன்மை, வலுவின்மை அல்லது கிடி (ஒருவித மயக்கம்) ஆகிய உணர்வுகளின் ஒரு கணநேர பாதிப்பு. கூடுதலாக வெர்டிகோவால் பாதிக்கப்படும் போது உங்களின் சுற்றுபுறம் சுழல்வதை போன்ற உணர்வால் நீங்கள் பேலன்ஸ் இழப்பதாக உணர்கிறீர்கள். மக்கள் பலர் வெர்டிகோவை குறைந்த ரத்த சர்க்கரை, குறைந்த ரத்த அழுத்தம், நீரிழப்பு, அல்லது மன அழுத்தம் ஆகியவற்றின் அறிகுறிகள் என்று ஊகம் செய்து புறக்கணிக்கிறார்கள். அப்பாட் மற்றும் ஐகியூவிஐ -ன் கருத்துக்கணிப்பானது வெர்டிகோவால் பாதிக்கப்படும் 44% மக்கள் குறைந்தது வாரமொருமுறை தலைசுற்றலை எதிர்கொள்கின்றனர் என்ற உண்மையை கோடிட்டு காட்டுகிறது. இந்த சக்கர் அல்லது வெர்டிகோவில் தலைசுற்றலின் தீவிரம் மாறுபடலாம் ஆனால் அதை புறக்கணிக்காமல் இருப்பது முக்கியம். விரைவிலேயே அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுவது உரிய காலத்தில் நோய் கண்டறியப்படுவதற்கும் எதிர்கால சிக்கல்களை தவிர்ப்பதற்கும் உதவுகிறது.

சென்னையிலுள்ள ஏவிஎஸ் கிளினிக்-ன் ஆலோசக நரம்பியல் நிபுணர் டாக்டர் ஏ.வி. சீனிவாசன் கூறுகையில், "வெர்டிகோ இப்போது இந்தியாவில் மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது. ஆனால் மக்களில் பலர் அறிகுறிகளை அடையாளம் காண்பதில்லை. இதனால் நோயறிதலும் சிகிச்சையும் தாமதமாகலாம். எவ்வாறு வெர்டிகோவை அடையாளம் காண்பது என்று பலருக்கு தெரிவதில்லை, அதாவது தலைசுற்றல் உணர்வு மற்றும் தொடர்புடைய அறிகுறிகளான நிலையற்றதன்மை மற்றும் குமட்டல் போன்றவற்றை. டிசினெஸ்-ஆல் (மயக்கத்தால்) தலைசுற்றல் (சக்கர்) மற்றும் வெர்டிகோவினால் தலைசுற்றல் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டை பற்றி புரிந்துக்கொள்வது சரியான நோயறிதலையும் சிகிச்சை ஆதரவையும் பெற உதவும்." என்று விளக்கினார்.

## மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை 2 மடங்காக உயர்வு - முதல்வர் ஸ்டாலின்

சென்னை, 21 செப் 2024: பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி ரூ. 15 கோடி அனுமதித்து முதலமைச்சர் ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

கலைஞர் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், நசுக்கப்பட்ட வர்கள் முதலானவர்களை ஆதிக்கவாதிகளிடமிருந்து காக்கும் நோக்கில் பல்வேறு சலுகைகளை வழங்கி, அவர்களெல்லாம் முன்னேறுவதற்கு வித்திட்ட சமூக நீதிக் காவலர் என்பது உலகறிந்த உண்மையாகும்.

உடல்உறுப்புகளும் மனவளர்ச்சியும் குன்றிய நிலையில் வாழ்ந்தவர்களுக்குப் புத்துணர்வும் புது வாழ்வும் அளிப்பதற்காக ஊனமுற்றவர் என்ற சொல்லை நீக்கி மாற்றுத் திறனாளிகள் என அவர்களுக்குப் பெயர் தந்து அவர்கள் நலன்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின்கீழ் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை என 27.3.2010 அன்று தனியே ஒரு துறையை புதிதாக ஏற்படுத்தி, அதன்மூலம் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்கள் வாழ்விலும் வளம் சேர்த்தார் கலைஞர்.

முதலமைச்சர் ஸ்டாலின், கலைஞர் காட்டிய வழியில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.1,000 என்பதை ரூ.1,500ஆகவும் உயர்த்தி வழங்கினார். அத்துடன், தற்போது, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையையும் உயர்த்தி அவர்கள் ஊக்கமுடன் கல்வி கற்க உதவி செய்துள்ளார்.

அதாவது, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 1,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 2,000 ரூபாய் என்றும்;

6 ம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 3,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 6,000 ரூபாய் என்றும்;

9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 4,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 8,000 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

# ஆட்டோமோட்டிவ் மேனுஃபேக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் [ஏ எம் பி எல்] - ன் அதிக எதிர்பார்ப்பு பெற்ற மஹிந்திரா & மஹிந்திராவின் எஸ்யுவி அறிமுகம்: தி தார் ராக்ஸ்

சென்னை, 21 செப் 2024: இந்தியாவின் முன்னணி எஸ்யுவி தயாரிப்பாளரான மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட், இந்நாட்டில் எஸ்யுவி தளத்தை மறுவரையறை செய்கிற தார் ராக்ஸ் - 'தி' எஸ்யுவி - ஐ பெருமையுடன் அறிமுகம் செய்கிறது. ரூ.12.99 இலட்சம் என்ற விலையில் வெளிவரும் தார் ராக்ஸ், மஹிந்திராவின் துணிவான மனத்திடம் மற்றும் வழக்கத்திலிருந்து மாறுபட்ட புதுமை உணர்வை பிரதிபலிக்கிறது. பார்ப்பவர்களை திரும்பிப் பார்க்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டுள்ள தார் ராக்ஸ் அதிக பாதுகாப்பானது; அதே வேளையில், ஆற்றல் வாய்ந்த செயல்திறனை கொண்டது. பல்வேறு ஆடம்பர சொகுசு அம்சங்களைக் கொண்டிருக்கும் தார் ராக்ஸ், அனைத்து வகையான தரைப்பரப்புகளிலும் இயக்குவதற்கு மிகவும் சுலபமானது.




மஹிந்திராவின் முற்றிலும் புதிய எம்_கிளைட் பிளாட்ஃபார்ம் மீது கட்டமைக்கப்பட்டிருக்கும் தார் ராக்ஸ் - ஐ மிக எளிதாக கையாளலாம். இவ்வகையினத்தில் மிகச்சிறந்த டைனமிக்ஸ் அம்சங்களை கொண்டிருப்பதால், இதன் பயண அனுபவம் மிகவும் இனிதாக இருப்பது நிச்சயம். தார் - ன் வெளியார்ந்த டி என் ஏ அம்சங்களை மேம்பட்ட நவீனத்துவத்துடன் நேர்த்தியாக கலந்து ப்ரீமியம் எஸ்யுவி அனுபவத்தை தார் ராக்ஸ் வழங்குகிறது, தங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் மிக நேர்த்தியானவற்றையே எதிர்பார்க்கின்ற மற்றும் அவற்றைப் பெறுவதில் உறுதியாக இருக்கின்ற நபர்களின் தேவைகளை இப்புதிய எஸ்யுவி சிறப்பாக பூர்த்தி செய்யும். பல்வேறு தரைப்பரப்புகள், உயரமான இடங்கள் மற்றும் மிக கடுமையான பருவநிலை நிலவும் சூழல்களில் கடுமையான பரிசோதனைகளுக்கு தார் ராக்ஸ் உட்படுத்தப்பட்டிருக்கிறது. தார் பாலைவனத்தின் சுட்டுப்பொசுக்கும் மணற்பரப்புகள், உம்லிங் லா - ன் மலைஉச்சி பிரதேசங்கள் மற்றும் கூர்க் - ன் சகதியான தரைப்பரப்புகள் மற்றும் காஸா - ல் -20குசி - ன் உறையவைக்கும் குளிர்பிரதேசங்கள் ஆகியவற்றில் தார் ராக்ஸ் பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. இதயத்தில் இந்தியராகவும் மற்றும் மனதளவில் உலகளாவிய மனப்பான்மையையும் கொண்டிருக்கும் குளோபல் இந்தியர்களின் வலுவான மற்றும் நம்பகமான விருப்பத்தேர்வாக தார் ராக்ஸ் திகழ்வதற்கு இந்த விரிவான பரிசோதனைகள் உத்தரவாதமளிக்கின்றன. சென்னை வாடிக்கையாளர்களுக்காக 300 + வாடிக்கையாளர்கள் ஆர்வத்தோடு கூடியிருந்த மக்களின் முன்பாக செப்டம்பர் 19-ம் தேதியன்று, ஆட்டோமோட்டிவ் மேனுஃபேக்ச்சரஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை (ஏ எம் பி எல்) ஆல் தார் ராக்ஸ் அறிமுகம் செய்யப்பட்டது. மிகச்சிறப்பாக நடைபெற்ற இந்த அறிமுக விழாவைத் தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு டெஸ்ட் டிரைவ்களை இந்நிறுவனம் வழங்குகிறது மற்றும் ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களின் பட்டியலை தயாரித்திருக்கிறது. இந்த மிகச்சிறந்த எஸ்யுவிக்கான அதிகாரப்பூர்வ முன்பதிவுகள் அக்டோபர் 3-ம் தேதி முதல் ஆரம்பமாகும்.

# ஆற்றல் மாற்ற உபகரணம் மற்றும் ஆற்றல் தொழில்நுட்பங்கள் நிறுவனமான குவாலிட்டி பவர் எலெக்ட்ரிக்கல் எக்யூப்மெண்ட்ஸ் லிமிடெட் ஐபிஓ ஆவணங்களை செபியுடன் தாக்கல் செய்கிறது

சென்னை, 21 செப் 2024: குவாலிட்டி பவர் எலக்ட்ரிக்கல் எக்யூப்மென்ட்ஸ் லிமிடெட் (குவாலிட்டி பவர்) தனது டிராஃப்ட் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸை (டிஆர்ஹச்பி) சந்தை கட்டுப்பாட்டாளரான செபியிடம் தாக்கல் செய்துள்ளது. இந்த நிறுவனம் மொத்தம் ரூ.2,250 மில்லியன் (ரூ.225 கோடிகள்) வரையிலான புதிய வெளியீடு மற்றும் 12,000,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் விற்பனைக்கான வழங்கல் (ஓஎப்எஸ்) ஆகியவற்றை உள்ளடக்கிய ஈக்விட்டி பங்குகளின் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.10) ஆரம்பப் பொது வழங்கல் (ஐபிஓ) மூலம் நிதி திரட்ட திட்டமிடுகிறது. குவாலிட்டி பவர் என்பது 100 நாடுகளில் உள்ள உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு 765 கேவி வரையிலான முக்கியமான ஆற்றல் மாற்றக் கருவிகள் மற்றும் ஆற்றல் தொழில்நுட்பங்களில் சேவையாற்றும் மற்றும் உயர் மின்னழுத்த மின் உபகரணங்கள் மற்றும் மின் கட்ட இணைப்பு மற்றும் ஆற்றல் மாற்றத்திற்கான தீர்வுகளை வழங்குகிற ஒரு இந்திய நிறுவனம் ஆகும். மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் ஆட்டோமேஷன் துறைகளில் மின் சாதனங்கள் மற்றும் தீர்வுகளை வழங்குவதில் இந்த நிறுவனம் நிபுணத்துவம் பெற்றது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த நிறுவனத்தின் தயாரிப்பு போர்ட்ஃபோலியோ டிகார்பனைசேஷன் முயற்சிகள், நிலைத்தன்மை மற்றும் பசுமை ஆற்றல் முயற்சிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு பங்களிக்கிறது.

கேர் ஆல் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின்படி, உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்டம் ("ஹச்விடிசி") மற்றும் ஃப்ளெக்சிபிள் ஏசி டிரான்ஸ்மிஷன் சிஸ்டம்ஸ் ("எப்ஏசிடிஎஸ்") நெட்வொர்க்குகளுக்கான முக்கியமான உயர் மின்னழுத்த உபகரணங்களின் சில உலகளாவிய உற்பத்தியாளர்களில் குவாலிட்டி பவர் நிறுவனமும் உள்ளது. இந்த உபகரணங்கள் மற்றும் நெட்வொர்க்குகள் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து பாரம்பரிய மின் கட்டங்களுக்கு ஆற்றல் மாற்றத்திற்கான முக்கியமான கூறுகளை உருவாக்குகின்றன.

கேர் - ஆல் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின்படி, குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கப்பட்ட ஆற்றல் இழப்புகளுடன் பயனுள்ள, நீண்ட தூர மின் பரிமாற்றத்தை செயல்படுத்துவதன் மூலம் ஹச்விடிசி தொழில்நுட்பமானது, ஆற்றல் மாற்றக் கருவிகள் மற்றும் ஆற்றல் தொழில்நுட்பங்களின் துறையை மாற்றியமைக்கிறது. இந்த முன்னேற்றமானது தொலைதூர இடங்களில் உள்ள கடலோர காற்றாலைகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள சோலார் ஆலைகள் போன்ற தொலைதூர இடங்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை நகர்ப்புறங்களில் ஒருங்கிணைப்பதற்கு முக்கியமானதாக இருக்கிறது.

இந்தியாவில் உள்ள இந்த நிறுவனத்தின் பல உற்பத்தி செயல்பாடுகள் மகாராஷ்டிராவின் சங்கிலி மற்றும் கேரளாவின் ஆலுவா உட்பட இரண்டு இடங்களில் பரவியுள்ளன. அதன் உலகளாவிய விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, இந்நிறுவனம் அதன் துணை நிறுவனம் மூலம் 2011 இல் துருக்கியை தளமாகக் கொண்ட நிறுவனமான எண்டோக்ஸ்எனெர்ஜி நிறுவனத்தின் 51% பங்கு மூலதனத்தை வாங்கியது, இது ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்பங்கள் மற்றும் ஆற்றல் தர மேலாண்மை ஆகியவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த ஆற்றல் தீர்வுகளை வழங்குகிறது.

ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட், ஜிஈ டி & டி இந்தியா லிமிடெட் அண்ட் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் & ரெக்டிஃபையர்ஸ் (இந்தியா) லிமிடெட் ஆகியவை குவாலிட்டி பவர் நிறுவனத்தின் சக நிறுவனங்கள் ஆகும். மார்ச் 31, 2024 நிலவரப்படி, இந்த நிறுவனத்திற்கு 210 வாடிக்கையாளர்கள் இருந்தனர். இந்த நிறுவனத்தின் இறுதி வாடிக்கையாளர்களில் மின்சக்தி பயன்பாட்டு நிறுவனங்கள், மின்சக்தி தொழில்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்கள் ஆகியவை அடங்கும். மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான செயல்பாடுகளின் மூலம் இந்நிறுவனத்தின் வருவாய் அதன் வரிக்குப் பிந்தைய இலாப வரம்பு 16.74% மற்றும் தோராயமாக 30% இன் ஆர்ஓஈ ஆகியவற்றுடன் ரூ. 300 கோடியாக இருந்தது. இந்த நிறுவனம் அதன் வருவாயின் பெரும்பகுதியை சர்வதேச செயல்பாடுகளில் இருந்து பெறுகிறது, இது நிறுவனத்தின் செயல்பாடுகளின் மொத்த வருவாயில் 75% க்கும் அதிகமாக உள்ளது.

மற்றவற்றுடன், மெஹ்ரு எலக்ட்ரிக்கல் அண்ட் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை கையகப்படுத்துவதற்கு நிகர வருவாயைப் பயன்படுத்த நிறுவனம் முன்மொழிகிறது. டிஆர்ஹச்பி இல் வெளியிடப்பட்ட முன்படிவ நிதிநிலை அறிக்கைகளின்படி, 2023-24 நிதியாண்டில், நிறுவனத்தின் மொத்த வருவாய், இலக்கு கையகப்படுத்துதலுடன் சேர்த்து வரிக்குப் பிந்தைய லாபமான ரூ.656.96 மில்லியன் (ரூ.65.69 கோடி) உடன், ரூ. 5506.99 மில்லியன் (ரூ.550.69 கோடிகள்) ஆக இருக்கும். பான்டோமத் கேபிடல் அட்வைசர்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆனது ஐபிஓ வின் ஒரே புக் ரன்னிங் லீட் மேலாளர் (பிஆர்எல்எம்) ஆகும்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் டி கேர் ஐ அறிமுகப்படுத்துகிறது: வாடிக்கையாளர்களின் உரிமை அனுபவத்தை உயர்த்துவதற்கான ஒரு புதிய முயற்சி

மதுரை, 21 செப் 2024: விதிவிலக்கான அனுபவங்களை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை மீறுவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சியில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டிகேஎம்) இன்று "டி கேர்" அறிமுகத்தை அறிவித்தது. டி கேர் ஆனது, ஒரு பிராண்டின் கீழ் மதிப்பு கூட்டப்பட்ட முன்மொழிவுகளுடன் பலவிதமான ஆதரவுகளை ஒருங்கிணைக்கிறது, வாடிக்கையாளருடனான ஒவ்வொரு ஈடுபாடும் டொயோட்டாவின் நம்பகத்தன்மை, தரம் மற்றும் விதிவிலக்கான கவனிப்பு ஆகியவற்றின் முக்கிய மதிப்புகளை பிரதிபலிக்கிறது என்பதை உறுதி செய்கிறது.




வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையால் உந்தப்பட்டு, "டி கேர்" ஆனது வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்துவதற்கும் நீண்ட கால உறவுகளை வளர்ப்பதற்கும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஒரு விரிவான சேவைகளை வழங்குகிறது. முன்விற்பனைகள் முதல் விற்பனைக்குப் பிந்தைய விற்பனை மற்றும் மறு கொள்முதல் வரை அனைத்தையும் உள்ளடக்கி, டி கேர் இந்த சலுகைகளை ஒரு ஒருங்கிணைந்த பிராண்டின் கீழ் ஒருங்கிணைக்கிறது. இந்த புதிய முயற்சி குறித்து கருத்து தெரிவித்த டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் விற்பனை, சேவை மற்றும் பயன்படுத்திய கார் வணிகத்தின் துணைத் தலைவர் திரு. சபரி மனோகர், "டொயோட்டாவில், நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் எங்கள் வாடிக்கையாளர்கள்தான் மையமாக உள்ளனர். விற்பனைக்கு முன், போது மற்றும் விற்பனைக்குப் பின் ஒவ்வொரு டச் பாயிண்டிலும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதில் எங்கள் கவனம் எப்போதும் இருக்கும். விதிவிலக்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், டொயோட்டாவுடனான அவர்களின் முழு உரிமை அனுபவத்திலும் எங்கள் வாடிக்கையாளர்களுடன் ஆழமான, நீடித்த தொடர்பை வளர்ப்பதற்கும் நாங்கள் முயற்சி செய்கிறோம். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட டி கேர் முன்முயற்சியானது டி டெலிவர், டி கிளாஸ், டி அசிஸ்ட், டி சாத், டி செக்யூர், டி சாய்ஸ் மற்றும் பல வகையான சலுகைகளை ஒருங்கிணைக்கிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் தேவைகள். டி கேர் ஆனது எங்கள் வாடிக்கையாளர் இணைப்பை மேலும் பலப்படுத்தும் மற்றும் பல ஆண்டுகளாக எங்கள் மீது வைக்கப்பட்டுள்ள அவர்களின் அபரிமிதமான நம்பிக்கையை பலப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம், இதன் மூலம் டொயோட்டாவின் மொபிலிட்டி நிறுவனமாக மாறுவதற்கான நோக்கத்தை ஆதரிக்கிறோம். எங்களின் விவேகமான வாடிக்கையாளர்களுக்கு உண்மையிலேயே திருப்திகரமான அனுபவத்தை உறுதிசெய்வது மற்றும் அவர்களின் எப்போதும் உருவாகிவரும் இயக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மிகவும் நம்பகமான கூட்டாளராகத் தொடர்வதே எங்கள் நோக்கம். குறிப்பிடத்தக்க வகையில், டிகேஎம் தற்போது 685 வாடிக்கையாளர் டச் பாயின்ட்கள் மற்றும் 360 டி ஸ்பார்ஷ் அவுட்லெட்டுகளைக் கொண்டுள்ளது, இது ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் மொத்தம் 1045 டச் பாயின்ட்களில் உள்ளது, டொயோட்டாவின் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை எளிதாக அணுகுவதை உறுதிசெய்து, அதன் மூலம் அவர்களின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு வசதியாக உள்ளது.

# கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில்: புதிய மருத்துவமனை உதயம்! தமிழ்நாட்டில் தரமான சிகிச்சை பராமரிப்பு சேவையின் விரிவாக்கம்

சென்னை, 21 செப் 2024: கேர் மருத்துவமனைகள் மற்றும் கிம்ஸ்ஹெல்த் ஆகியவற்றை நிர்வகித்து வரும் குவாலிட்டி கேர் இந்தியா லிமிடெட் ("குவாலிட்டி கேர்"), கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவிலில் 210 படுக்கை வசதிகள் கொண்ட நான்காம் மற்றும் மூன்றாம் படிநிலை உயர்சிகிச்சை மருத்துவமனையை கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில் என்ற பெயரில் தொடங்குவதன் மூலம் தமிழ்நாட்டில் கால் பதிப்பதை பெருமையுடன் அறிவிக்கிறது. தமிழ்நாடு அரசின் தொழில்துறை, முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. டி.ஆர்.பி ராஜா மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் மற்றும் பால் மற்றும் பால்பண்ணை மேம்பாடு துறையின் மான்புமிகு அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் ஆகியோர் உட்பட பல பிரபல ஆளுமைகள் இம்மருத்துவமனை திறப்புவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். கேரளா மாநிலத்தில் சிறப்பான நற்பெயருடன் இயங்கி வரும் கிம்ஸ்ஹெல்த், தனது உயர்தர உடல்நல பராமரிப்பு சேவைகளை மேலும் விரிவாக்க நாகர்கோவிலை தேர்வு செய்திருக்கிறது. கிம்ஸ்ஹெல்த் - ன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர். எம்.ஐ. சஹதுல்லா, இது குறித்துப் பேசுகையில், "இன்னும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் சமூகத்திற்கு சேவையாற்றுவது எங்களது நோக்கமாக இருப்பதால், தமிழ்நாட்டில் எங்களது நுழைவு ஒரு இயற்கையான முன்னேற்ற நடவடிக்கையாகும். குவாலிட்டி கேர் நிறுவனத்தின் ஆதரவோடு உலகத்தரம் வாய்ந்த மருத்துவ நெறிமுறைகள் மற்றும் நன்னெறி தரநிலைகளோடு கனிவுடன் கூடிய பிரத்யேக சிகிச்சை சேவைகளை வழங்குவதில் எங்களது அர்ப்பணிப்பை நாங்கள் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்கிறோம்." என்று கூறினார். 210 படுக்கை வசதிகள் கொண்ட நான்காம் மற்றும் மூன்றாம் படிநிலை உயர் சிகிச்சைக்கான மருத்துவமனையாக நிறுவப்பட்டிருக்கும் கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில், இப்பிராந்தியத்தில் முதன்மையான மருத்துவ மையமாக உருவெடுக்க அனைத்து திறன்களையும், வசதிகளையும் கொண்டிருக்கிறது. ஒரு லைனியர் ஆக்சலரேட்டர் மற்றும் நவீன கேத் லேப் உட்பட, மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட இம்மருத்துவமனை, பல்வேறு சிறப்பு பிரிவுகளிலும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி சேவைகளின் விரிவான தொகுப்பை வழங்குகிறது. மேம்பட்ட மருத்துவ சிகிச்சை விளைவுகளை வழங்குவதற்கு இம்மருத்துவமனை முன்னுரிமையளிக்கும். பல்வேறு உடலுறுப்புகள் மாற்று சிகிச்சை, புற்றுநோய்க்கு விரிவான சிகிச்சை பராமரிப்பு, எலும்பு முறிவியல், விபத்து சிகிச்சை, இதய அறிவியல் சிகிச்சை உட்பட அத்தியாவசிய சிகிச்சை சேவைகளையும் இம்மருத்துவமனை நிபுணத்துவம் மிக்க மருத்துவர்களை கொண்டு வழங்கும். இப்பிராந்தியத்தில் வசிக்கும் மக்களின் அனைத்து வகையான மருத்துவ தேவைகளையும் சிறப்பாக பூர்த்தி செய்யும் வகையில் இம்மருத்துவமனை செயல்படும்.




குவாலிட்டி கேர் -ன் குழும நிர்வாக இயக்குனர் திரு. வருண் கண்ணா பேசுகையில், "மிகச்சிறப்பான சிகிச்சை பராமரிப்பு சேவைகளை வழங்குவதிலும் மற்றும் எமது நோயாளிகளின் வாழ்க்கையில் ஆக்கப்பூர்வ தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் எங்களை நாங்கள் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் எட்டாவது மாநிலமாக தமிழ்நாட்டில் எங்களது சேவை செயற்பரப்பை நாங்கள் விரிவாக்குகிற போது, கிம்ஸ்ஹெல்த் நாகர்கோவில் மருத்துவமனையின் தொடக்கமானது, இந்நாட்டில் உயர்தர சேவை மீதான கூர்நோக்கத்துடன் முதன்மையான சிகிச்சை பராமரிப்பு சங்கிலித்தொடர் நிறுவனமாக வளர்ச்சியடைய வேண்டும் என்ற எமது தொலைநோக்கு திட்டத்தின் ஒரு அங்கமாகும். உள்ளூர் மக்களின் மாறுபட்ட உடல்நல பராமரிப்பு தேவைகளை திறம்பட பூர்த்தி செய்கிறவாறு நோயாளியின் நலனை மையமாக கொண்ட அணுகுமுறையை நாங்கள் பின்பற்றுவோம். இதன் அடிப்படையில், உயர் தரமான சேவையை கனிவுடன் வழங்குவதில் நாங்கள் உற்சாகமும், பெருமிதமும் கொள்கிறோம்." என்று கூறினார்.